

சென்னை மேற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று 26.05.2026 மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு நிர்வாகிகளுக்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மக்கள் பயனுறும் வகையில் நலத்திட்ட உதவிகளுடன் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும் மேலும் கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள் காணொலிக் கூட்டம்!

### பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி மாநில தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும் காணொலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

நாள் : 31-05-2026, ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி

பொருள்: 1) முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கொண்டாட்டம் & நலதிட்ட உதவிகள் குறித்து.

2) அணியின் செயல்திட்டங்கள் குறித்து.

இக்கூட்டத்தில் பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

## திருவள்ளூர் அடுத்த மணவாளநகரில்

# 2 நாட்களாக நீடித்து வரும் மின்தடையால் பொதுமக்கள் அவதி!

### 300–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியல்!

திருவள்ளூர், மே 27:

திருவள்ளூர் அடுத்த மணவாளநகர் அருகே உள்ள ஜல்லிமேடு பகுதி மற்றும் கன்னியம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 நாட்களாக நீடித்து வரும் மின்தடையை கண்டித்து, என்டிபி திருமண மண்டபம் எதிரே சாலையில் அமர்ந்து 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த போராட்டத்தில் பெண்கள், முதியோர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். “உடனே மின்சாரம் வழங்க வேண்டும்”, “மக்களை அலட்சியம் செய்யாதீர்கள்” என தொடர்ந்து கோஷங்கள் எழுப்பியதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. மேலும், மின்சாரம் இல்லாததால் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர்.

“குழந்தைகளுக்கு குடிக்க கூட தண்ணீர் இல்லை. இரவு முழுவதும் இருளில் தவிக்கிறோம். முதியோர்கள், கர்ப்பிணி பெண்கள் கடும் சிரமத்தில் உள்ளனர்” என பெண்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். மேலும், “மின்சாரம் வழங்கும் வரை இந்த போராட்டத்தை கைவிடமாட்டோம். பகலும் இரவும் தொடர்ந்து போராட தயாராக இருக்கிறோம்” என்று பொதுமக்கள் தெரிவித்ததால் அங்கு பரபரப்பாக காணப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மணவாளநகர் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. உடனடியாக மின்வாரிய அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர்.

## மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் பங்கேற்பு!

# அண்ணாநகர் 101 வது வட்ட செயற்குழுக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, மே. 27 -

அண்ணா நகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, இன்று (27.05.2026 - புதன்கிழமை) மாலை 7 மணி அளவில் எண். 38/13, திருவள்ளுவர் நகர் அண்ணா நகர் கிழக்கு, 101 வது வட்ட அவைத் தலைவர் எஸ்.முரளி கிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், B.L.A. 2, மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கு மாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா குறித்து

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஆர்.என்.துரை சிறப்புரை! 119 அ வட்டக் கழகக் கூட்டம்!

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை கழகக் கொடியேற்றி - நல உதவிகள் வழங்கி கொண்டாட்டம்!

### கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம் – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மே 27-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 {அ} வட்ட கழக சார்பில் ஞாயிறு மாலை கேசர் திருமண மண்டபத்தில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை நாளை முன்னிட்டு, மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. அவர்களின் ஆலோசனைப்படி, வட்டக் கழக அவைத்தலைவர் சி.வாசன் தலைமையில் வட்டக் கழக செயலாளர் லைனர். கே.பிரபு வரவேற்புரையில் பகுதி கழக செயலாளர் ஏ.ஆர்.பி எம்.காமராஜ், பி.வேலு, அழகம்மாள் என்கின்ற சித்ரா,வே.சௌந்தர் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை சிறப்புரையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள், கே.ரவி, ஜே.அன்பரசு, ஆ.காமாட்சி, கோ.மகேஷ், கோ.தனசேகரன், ச.ரமேஷ், ஆர். ராதாகிருஷ்ணன், கு.சதீஷ்குமார், டி.ஜெபஸ்டின், டி.குப்புசாமி, எஸ்.மீனா, க.கற்பகம், எஸ்.மீனாட்சி, சு.கற்பகம், ஜா.சசிரேகா, ந.செல்வி, எ.இந்திரா,ஆர். பாபு, எம்.நவின்குமார், ஆர்.அரவிந்த், ஆர். புவனேஸ்வரன் எம்.தேவா, மணிகண்டன் என்கின்ற ஹரி, நன்றியுரை மு.ஜெகதீஷ், என்கின்ற அசோக், ஆகியோர் கலந்து கொண்டு. கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்:1 கழகத் தலைவர். தளபதி அவர்களின். 2021 ஆண்டு முதல் முதல்வராக பொறுப்பேற்று , எல்லோருக்கும் எல்லாம் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் செயல் திட்டங்களை தீட்டி, உள்கட்டமைப்பு, தொழில்துறை வளர்ச்சி, குறிப்பாக மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் ஆகியவைகளை 30ஆண்டுகளில் செய்யக்கூடிய திட்டங்களை ஐந்தாண்டுகளில் செய்து முடித்து தமிழ்நாடு முதல் மாநிலமாக உருவாக்கியவர். நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் கழகத்திற்கு பெரும் தோல்வி தந்து ஏமாற்றிய பொது மக்களுக்கு இந்தக் கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தீர்மானம்:2 தலைமையும், கழகத்தையும், காத்து, பீனிக்ஸ்_பறவை போல் உயர்ந்து மீண்டும் கழகத் தலைவர் தளபதி அவர்களை அறியாமையில் உட்கார வைக்கும் வரை ஓயாத உழைப்போம்.

தீர்மானம் : 3 சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வட்ட கழகத்தில் அயராத உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், வாக்களித்த பொது மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தீர்மானம்: 4 புதியாதாக முதல்வராக பொறுப்பேற்ற தமிழக வெற்றி கழக தலைவர். மாண்புமிகு ஜோசப் விஜய், அவர்களின் திறமையற்ற நிர்வாகத்தால், கடந்த 15 நாட்களில் கற்பழிப்பு, கொள்ளை, கொலை, மாமுல் வசூல்,மின்சாரம் துண்டிப்பு, அதிகாரிகளிடம் அதிகார துஷ்பிரயோகம், ஆகியவை நிகழ்த்தி காட்டி, பணிகளைசரிவர செய்யாதலால் பொதுமக்கள் அச்சத்துடன் தினம் தினம் செத்துப் பிழைக்கிறார்கள்.

தீர்மானம்:5 தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, ஜூன் 3ன்று மிக விமர்சையாக அதாவது அவர்கள் வாழ்ந்த சி.ஐ.டி. காலனி சாலையில், உள்ள வீட்டின் நுழைவாயில் பந்தல் அமைத்தல், இரு வண்ணக் கழக கொடி தோரணங்கள் கட்டுதல், வண்ணம் மின்விளக்குகளால் அலங்கரித்தல், கலைஞர் அவர்களின் ஆட்சியில் செய்த சாதனைகளை பிளக்ஸ் பேனர் மூலம் செய்து வைத்தல், காலை சிற்றுண்டி, மத்திய உணவு ஏற்பாடு செய்தல்.

தீர்மானம்:6 வி.பி. ராமன் {இலாயிட்ஸ்} சாலை. வி.எம்.தெரு, சந்திப்பில், கழகக் கொடியேற்றுதல், ஒலிபெருக்கி அமைத்தல், அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்குதல் ஆகிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# 141 வது வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் !

### கோ.உதயசூரியன் அறிவிப்பு !

சென்னை மே: 27

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 141வது வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து வட்ட பொறுப்பாளர் கோ. உதயசூரியன் அறிக்கை வருமாறு;

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் கே. ஏழுமலை,கோ.சு. மணி ஆகியோரின் அறிவுறுத்தின்படி

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி,141 வது வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று ( 27.5.2026 புதன்கிழமை ) மாலை 5 மணி அளவில் வட்ட செயலாளர் அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து.

ஆகவே கூட்டத்தில் அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு வட்டப் பொறுப்பாளர் கோ.உதயசூரியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றியம், பேரூர் கழக வட்ட செயலாளர்கள் கூட்டம் மாதவரம் லட்சுமிபுரம் எஸ்.வி.திருமண மண்டபத்தில் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்ற அவசர கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் பேசினார். இதில் மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்கள்.

## போதுமான புரிதல் இல்லாத அமைச்சரின் கீழ் இயங்குகிறது!

# மின்வாரியம் இவ்வளவு மோசமாக முன்னெப்போதும் இருந்ததில்லை!

### தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, மே 27-

போதுமான புரிதல் இல்லாத அமைச்சரின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்குகிறது. எனவே தான் கடுமையான மின்வெட்டு நிலவுகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மோசமாக உள்ளதாக தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மற்றும் பல மாவட்டங்களில் ஏற்பட்ட தொடர் மின்வெட்டு சம்பந்தமாக, மின்துறை அமைச்சர் ஊடகங்கள் வாயிலாக தெரிவித்த தவறான குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 2021 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் 2026 வரை முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கும் குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பல நன்மைகள் செய்துள்ளார்கள். தமிழ்நாட்டில் சுமார் 3 கோடியே 36 இலட்சத்து 55 ஆயிரம் நுகர்வோர்கள் இருக்கின்ற நிலையில், அவர்களின் உட்சபட்ச மின் தேவையான 27,307 மெகாவாட் (நாள்:29. 04. 2026) மின்சாரத்தை எவ்வித தடையும் இன்றி வழங்கி, தமிழ்நாட்டு மக்களின் மின்தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்ததுதான் திராவிட மாடல் ஆட்சி!. கடந்த 5 ஆண்டுகால கழக ஆட்சியில் தேவைக்கேற்ப துணைமின்நிலையங்களை அதிகப்படுத்தியும், மின்விநியோகக் கட்டமைப்பை கூடுதலாக நிறுவியும் மற்றும் பலப்படுத்தியும், ஆங்காங்கே புதிய மின்மாற்றிகளை அமைத்தும் மின்சாரத்தை கொண்டு செல்வதற்கு ஏதுவாக HT மற்றும் LT லைன்களை புதியதாக நிறுவியும் மின்நுகர்வோருக்கு எவ்விதமாக இடர்பாடுகளும் ஏற்படாதாவாறு மிகச்சிறந்த நிர்வாகத் திறமையுடன் கையாளப்பட்டதே, கடந்த தி.மு. கழக ஆட்சியில் தடையில்லா மின்சாரம் வழங்கிட காரணமாகும்.

பொதுமக்களின் புகார்களை 2021ல் மின்னகம் (கைப்பேசி எண் 94987 94987) என்ற பிரிவை ஏற்படுத்தி, அதன் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து எவ்வித காலதாமதம் இன்றி பொதுமக்கள் பயன்படும் வகையில் புதிய மின்இணைப்பு, பெயர்மாற்றம் உள்ளிட்ட மற்ற சேவைகளும் சிறப்பாக தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டதை ஏதோ இந்த அரசு வந்த பிறகுதான் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டது போல ஒரு அமைச்சர் பேசுவது வடிகட்டிய பொய்யாகும்.

தமிழ்நாட்டின் உச்சபட்ச மின்தேவை கடந்த 29.04.2026 அன்று 21,307 மெகாவாட் அதே நாளில் உச்சபட்ச மின்நுகர்வு 471.456 மில்லியன் யூனிட் ஆகும். கடந்த 4 நாட்களாக தமிழகத்தில் வெயிலின் தாக்கம் 108 டிகிரி வரை இருந்தது. அதன் காரணமாக மின்சாரம் நுகர்வு உயர்ந்துள்ளது. ஆகையால் மின்விநியோகத்தில் கடும் இடர்பாடுகள் ஏற்பட்டடுள்ளது. அதனால் தற்சமயம் கடந்த ஒரு வாரமாக மின்நுகர்வோரின் தேவையை சமாளிக்க முடியாமல் கடும் மின்வெட்டு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வீதிக்கு வந்து இந்த அரசுக்கு எதிராக கண்டனங்களை தெரிவித்து வருகிறார்கள். கடந்த காலங்களில் இதுபோன்று மின்விநியோகத்தில் இடர்பாடுகள் ஏற்படும் போது அனைத்து மின் தொழிற்சங்க நிர்வாகிகளையும் கலந்து ஆலோசித்து அதற்கான தீர்வு காணப்பட்டது. கோடை காலத்தில் தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தை எங்கிருந்து எப்படி பெறப் போகிறோம் என்று முன்கூட்டியே மின்வாரிய அதிகாரிகளுடனும், தொழிற்சங்கங்களுடனும் விவாதித்து முன்னெச்சரிக்கைகான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய மின்சாரத் துறை அமைச்சர் கடந்த கால தி.மு.க. ஆட்சியின் மீது பழிப்போட்டு தப்பிக்க முயற்சிக்கிறார். மேலும் ஏற்பட போகும் கூடுதல் மின்தேவைக்காக எவ்வித முன்நடவடிக்கை எடுக்காமல் மின்சாரத்துறை பற்றிய போதுமான புரிதல் பெறாத அமைச்சரின் கீழ் இயங்கும் மின்வாரியம் இவ்வளவு மோசமாக முன்னெப்போதும் இருந்ததில்லை. ‘வரும் பொருள் உரைத்தல் மந்திரிக்கு அழகு’ என்பது தமிழ் பழமொழி! வந்த பின்பும் பொருள் உரைக்க முடியாமல் திணறுவது மந்திரியாய் இருக்கவே தகுதியில்லை என்பதை காட்டுகிறது இந்த மின்வெட்டு!

எனவே தி.மு.க. ஆட்சியின் மீது பழிபோடுவதை நிறுத்திவிட்டு இனிமேலாவது துறைரீதியாக அதிகாரிகளுடனும், தொழிற்சங்கங்களுடனும் ஆய்வுக் கூட்டம் நடத்தி, விவாதித்து மின் தட்டுப்பாட்டை நீக்கி மக்களை காப்பாற்ற இந்த அரசு முன் வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்றத்தூர் தா.மோகலிங்கம்
### மே 27 (2012)



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் கழகம் வளர அரும்பாடுபட்டவர். குன்றத்தூர் பேரூர்க் கழகச் செயலாளராக தொடர்ந்து முப்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக ஐந்து ஆண்டுகள் மக்கள் பணியாற்றினார்.

திருப்பெரும்புதூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் இருந்துள்ளார்.

அவர்மீது கொலைமுயற்சி வழக்கு உள்ளிட்ட பல பொய் வழக்குகள் தொடரப்பட்டு அ.தி.மு.க. ஆட்சியில் பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**